Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.30/2025 Date:22.05.2026
Deposition of witness for prosecution: PW1 ( LW1 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | வில்லியம் | Village | கம்பம் |
| Father/ Husband Name | மாணிக்கம் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 63 /2026 | Calling | இராணுவம் (ஓய்வு ) |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 22.05.2026 TIME 12.30 **PM**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது கம்பத்தில் குடியிருந்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 2 வருடத்திற்கு முன்பு எனது வீட்டின் முன்பு கூட்டமாக இருந்தார்கள். என்ன சத்தம் என பார்ப்பதற்கு நான் சென்றபோது அங்கே ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழேவிழுந்ததில் ஊமைக்காயம் ஏற்பட்டது. நடந்த சம்பவத்தைப் பற்றி காவல் நிலையத்தில் சொல்வதற்கு சென்ற போது காவல் நிலையத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டபடும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அசாஆ.1** ஆகும். புகாரில் எழுதியுள்ள விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 04.09.2024–ம் தேதி மாலை 07.30 மணியளவில் எனது வீட்டில் இருந்த எனது வாகனத்தை எடுத்த போது, எனது வீட்டு அருகே எதிரிகள் 1,2 அவர்களது வாகனத்தை நிறுத்தப்பட்டுருந்ததை குறித்து பாதையை மறைத்து நிறுத்தாமல் சற்று தள்ளி நிறுத்தலாம் என கேட்டதற்கு 1,2 எதிரிகள் அப்படித்தான் நிறுத்துவோம் என்று சொல்லி அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், 3,4, 5 எதிரிகள் 1,2 எதிரிகளுடன் சேர்ந்து, அனைவரும் கூட்டாக என்னை ஆபசமான வார்த்தையால் அசிங்கமாக திட்டியும், கையால் மாறி மாறி அடித்ததில் ஊமைக்காயம் ஏற்பட்டது என்றும், அச்சமய்த்தில் 1–வது எதிரி வீட்டிற்குள் சென்று மண்வெட்டியின் கைப்பிடியை எடுத்து வந்து எனது தலையில் அடித்ததில் இரத்த காயமும் ஏற்படுத்தினார்கள் என்றும், எதிரிகள் அனைவரும் சேர்ந்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று என்னை பார்த்து கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும், புகார் வாக்குமூலத்தில், போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாகி நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

SD/P.Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.